1981 ஏப்ரல் 4]

திலே மதுரை மாவட்டத்தில், கொடைக்கானல் பகுதியிலே ஏராளமான மரங்கள் பெரிய அளவில் வெட்டப்படுகின்றன. முறையற்ற முறையிலும் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். கொடைக்கானலுக்கு அழகு தந்துகொண்டிருக்கின்ற பேரிஜம் ஏரியைச் சுற்றி இருந்த ஆயிரக்கணக்கான மரங்களை வெட்டிவிட்டு, அதனால் அந்த ஏரியே அழிந்துவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கின்றது. இதுபோன்ற சமூக விரோதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கும், மரங்களை அனுமதியில்லாமல் வெட்ட முற்படுகின்றவர்கள் மீதும் அரசு இதுவரை என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மரங்களை அனுமதியில்லாமல் வெட்டுகின்றவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு விரும்பி, அதற்காகச் சில சட்டத் திருத்தங்களை செய்து, வனத்துறை அதிகாரிகளுக்கு கடுமையான உத்தரவை பிறப்பித்துக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது கிடைக்கக்கூடிய தகவல்களின்மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். என்றாலும், இப்படிப்பட்ட புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. ''கள்வன் பெரிதா, காப்போன் பெரிதா'' என்ற ஒரு பழமொழி இருக்கிறது. அதிலும் குறிப்பாக வனத் துறையைப் பொறுத்தவரை இது காவல் இல்லாத, வேலி இல்லாத வனத்துறையாக இருக்கின்ற காரணத்தினால், பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு ஒருவர் இருவர் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்கிறார்கள். இந்த நிலையிலே இதிலே சமுதாய விரோதிகள் என்கிற பெயராலே சிலர் ஈடுபட்டு மரங்களை வெட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அரசு கடுமையான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பாக ஏதாவது தகவல் அவரிடத்திலே இருந்து தருவார்களேயானால், அதை விசாரித்து தடுப்பதற்கும் வசதியாக இருக்குமென்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

வடமதுரை அருள்மிகு சௌந்திரராசப் பெருமாள் கோயில்.

*வினா எண். 636—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் வட்டம் வடமதுரை அருள்மிகு சௌந்திரராசப் பெருமாள் திருக்கோயிலின் முன் மண்டபம் கட்டும் பணி நீண்ட நாட்களாக காலதாமதம் ஆகக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டம், வடமதுரை அருள்மிகு சௌந்திரராசப் பெருமாள் ஆலயத்தின் முன் மண்டபம் கட்டும் பணி மேற்படி

ஆலய நிதிநிலை திருப்திகரமாக இல்லாததால் நீண்டகாலமாக நடைபெறாதிருந்து வருகிறது. இருப்பினும் விரைவில் இவ் வேலையைத் தொடங்க தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருப்பணி 1965-லே தொடங்கப்பட்டு, அதற்கு நிதி வசதி சரியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நிதி நிலை சரியில்லை என்பதால், நிதி நிலை வசதியாக இருக்கின்ற கோவில்கள் கடன் கொடுத்து, அந்தத் திருப்பணியை முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலை சரியில்லாத கோவில்கள் பல்லாயிரம் தமிழகத்திலே இருக்கின்றன. நிதிநிலை சரியாக இருக்கின்ற கோயில்கள் சிலதான்; அதுவும் 100, 150 தான் இருக்கின்றன. இப்படி நிதிநிலை இல்லாத கோயில்களுக்கு நிதி நிலை சரியாக இருக்கின்ற கோயில்களிலிருந்து அந்தத் தொகை திருப்பிவிடுவதென்றால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அதுவும் நிதிநிலை சரியில்லாத கோயிலாக மாறிவிடுவதற்கு வாய்ப்பிருக்கிறது. இருந்தாலும், இந்தத் திருப்பணியைப் பொறுத்தவரை மேலும் நடவடிக்கை எடுப்பதற்கு, ஒரு புதிய திருப்பணிக் குழுவை அமைத்து, இந்த வேலையை விரைவுபடுத்துவதற்கான முயற்சியில் அறநிலையத் துறை ஈடுபட்டிருக்கிறது.

[முற்பகல் 9-20]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் வட்டம் வடமதுரை அருள்மிகு சௌந்திரராசப் பெருமாள் கோயில் மட்டுமல்லாமல் தமிழ் நாட்டில் பல கோயில்கள் இப்படி முடியாத நிலையில் இருப்பதால் திருப்பணி வேலைகள் தடைப்பட்டு இருக்கின்றன. ஆகவே, அரசே தன்னுடைய நிதியிலிருந்து பொருளாதார வசதி செய்து திருப்பணி வேலைகளைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசே தன்னுடைய நிதியிலிருந்து அப்படிப்பட்ட திருப்பணிகளை நடத்த முடியாது. விரும்பவும் முடியாது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடமதுரை சௌந்திரராசப் பெருமாள் கோயில் வருமானம் இல்லாத காரணத்தால் திருப்பணி வேலைகள் தடைப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். வருமானம் இல்லாத தொழில்

1981 ஏப்ரல் 4]

களையே அரசு கைவிட்டுக் கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையில் வருமானம் இல்லாத சுவாமிகளை, வருமானம் உள்ள இடத்தில் கொண்டு போய் வைத்து விட அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருப்பது திருப்பணி செய்வதைப்பற்றிய கேள்வி. அதற்குத்தான் பதில் அளித்துக் கொண்டிருக்கிறேன்.

கும்பகோணத்தை சுற்றுலா மையமாக்கல்,

*வினா எண். 637—திரு. இ. எஸ். எம். பக்கீர்முகமது: மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் சுற்றுலா இடமாக அறிவிக்கப்படுமா?

(ஆ) அரசு சுற்றுலா மாளிகை ஏற்படுத்த செயற்குறிப்பு உண்டா ?

(இ) எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) கும்பகோணத்தில் சுற்றுலா மாளிகை கட்டும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை. ஆனால், அங்கு ஒரு சாலை ஓர தங்கும் விடுதி (Motel) அமைப்பது பற்றிய திட்டம் ஒன்று தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "இல்லை" என பதில் சொன்னார்கள். கோவில்கள் அதிகமாக இருக்கிற கும்பகோணம் 12 சிவ ஸ்தலங்களையும், 12 விஷ்ணு ஸ்தலங்களையும் கொண்டிருக்கிறது. வருடா வருடம் மாசி மகம் திருவிழாவும், 12 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் மகாமகம் திருவிழாவும் நடைபெற்று வருகின்றன. இதை ஒரு 'நேஷனல் பெஸ்டிவல்' ஆக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். சுற்றுலா இடமாக அறிவிப்பதற்கு இல்லை என்று சொல்லியிருப்பதை அறிந்து வருத்தப்படுகிறேன். ஆகவே மீண்டும் பரிசீலித்து சுற்றுலா இடமாக அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் விரும்பிச் செல்கிற இடங்கள் தான் சுற்றுலா மையமாக மாறுகிறதே தவிர அரசு சுற்றுலா